[1975 நவம்பர் 10

*261. வினா—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டத் தொழில் அனைத்துக்கும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட குழு அண்மையில் மாற்றியமைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்படி தோட்டத் தொழிலாளர்களுக்கான குழு மாற்றியமைக்கப்பட்டது.

(இ) தொழிலதிபர்களுக்கும், தொழிலாளர் பிரதிநிதி களுக்கும் சரிசமமான பிரதிநிதித்துவத்தை அளிக்கவும் மேலும் மேற்படி பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் 1974-ம் ஆண்டு அமைக்கப்பட்ட குழு 1975-ம் ஆண்டில் மாற்றியமைக்கப் பட்டது.

*262. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up Advisory Committees to recommend minimum wages for workers engaged in building constructions, road building and repairs, quarries, hotels and restaurants; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) கட்டடங்கள், கட்டுமானப் பணிகள், சாலை அமைத்தல், பழுது பார்த்தல், கல் வெட்டி எடுத்தல், உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் ஆகிய வற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப் பட்டு செயல்பட்டு வருகின்றன. அவற்றின் அறிக்கை இன்னும் அரசுக்கு வரவில்லை.

*263. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழி லாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—